1983 பிப்ரவரி 10]

வரத்துக்கு இடைஞ்சல் செய்கிற அளவில் இருக்கின்றது. எனவே அவ்வாறு கரும்புச் சக்கை போடப்படுவது அப்புறப்படுத்தப்படுமா அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கேள்வி சாலையைப் பற்றியது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சாலைக்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 32 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) பார்வையாளர்கள் மாடம்.

(முற்பகல் 10.30)

திரு. பாபு ஜனார்த்தனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் திடீரென்று பார்வையாளர்கள் காலரியில் பாஸ் ஏற்பாடு செய்யவில்லை. நாங்கள் எல்லாம் நிறைய பேர்களை, மகளிர்களை அழைத்துக் கொண்டு வந்து இருக்கிறோம். அவர்கள் வெளியே காத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. அங்கே மின்சார பேன்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மின்சாரம் இல்லாத இந்த நேரத்தில் இப்படி ஆட்கள் இல்லாத அங்கே பேன்கள் ஓடுவது அவசியம் தானா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேன்கள் ஓடுவதை நிறுத்திவிடலாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பகுதி கலவரப் பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றே இதுபற்றி தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவரே நேற்று பேச முடியவில்லை. திடீர் என்று என்னைக் கேள்வி கேட்பதில் என்ன அர்த்தம். நேற்று அவர் பேச முடிந்ததா ? அவர் இளைஞர். அவராலேயே நேற்று இங்கே முடியவில்லையே. இந்தப் பகுதியைக் கலவரப் பகுதி என்று ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கட்டளை மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால் இவைகளில் தண்ணீர் வரவில்லை. தண்ணீர் நிறுத்தப்பட்ட காரணத்தினால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்து போய்விட்டது. அது சம்பந்தமாக ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானமாக கொண்டு வாருங்கள். எதுவுமே கொடுக்காமல் திடீர் என்று கேட்டால் எப்படி? ஒரே நாளில் அவைகள் காய்ந்து இருக்காது. ரொம்ப நாள் தண்ணீர் வராமல் போனதால் தான் காய்ந்து இருக்கும். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வாருங்கள். எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-2-1983 அன்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். கும்பகோணம் சோமேஸ்வரர் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு மெய்க்காவலர் கொலை செய்யப்பட்டார் என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை இன்று எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அது வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பார்வையாளர்கள் மாடம் தொடர்ச்சி

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் காலரி பற்றி பதில் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பார்வையாளர் காலரியில் பார்வை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற வருவாய் நீதி மன்றத்தில் இருக்கின்ற சட்ட விதிகளின்படி, இன்றைக்கு இருக்கின்ற குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு விளைச்சல் இருக்கிறதோ அந்த சதவிகிதத்திற்குத் தகுந்தபடி கொடுக்கலாம் என்பது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி, இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலேயே நீதி மன்றங்கள் உடனடியாக வெளியேற்றி இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கே சொல்லி இருக்கிறார்கள். அதையும் அரசு ஆராய்ந்து என்ன செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து, மேலும் இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழ அழகர்சாமி: தலைவர் அவர்களே; அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அதற்குத்தான் நான் உங்களைப் பேச அழைத்தேன். ஆனால் நீங்கள் திரு. உத்திராபதி அவர்களைப் பேசவிட்டீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அங்கே இருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள். அதற்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்து. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு அதை நல்ல கவனத்தோடு பரிசீலிக்கும் என்று சொல்லி இருக்கிறது. கவனத்தோடு பரிசீலிப்பார்கள்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) பார்வையாளர்கள் மாடம்—தொடர்ச்சி.

அடுத்து திரு. ரகுமான்கான் அவர்கள், மேலே உட்கார்ந்து இருப்பவர்கள் எல்லாம் சி.ஐ.டி.க்கள் என்று ஒரு குறிப்பைச் சொன்னார்கள். நான் அதை விசாரித்துப் பார்த்த வரையில் அங்கே இருப்பவர்கள் எல்லாம் செக்ஷன் ஆபீசர்கள், நம்முடைய செக்கரடேரியட்டைச் சேர்ந்த பல அலுவலர்கள் அங்கே உட்

கார்ந்து இருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு உதவுகிற வகையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அபிசியலாக பாஸ் களை வாங்கித்தான் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (குறுக் கீடு) திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை யின் தொடர்பாக, காலரியில் தற்போது பார்வையாளர்கள் அனு மதிக்கப்படுவார்கள்.

5. கவன ஈர்ப்பு.

பூங்கா நகர் தொகுதி, புது ஜெகநாதபுரத்தில் குடிசைகள் பிரிக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என்.வி.என் சோமு, துரை முருகன், க. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர் களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வருவார்.

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, '24–1–83 அன்று சென்னை பூங்கா நகர் தொகுதியில் புது ஜெக நாதபுரத்தில் 400 குடிசைகளைப் பிரித்துப் போட்டதால் அப் பகுதி மக்களிடையே நிலவும் கவலை குறித்து'' அவ சரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

புது ஜெகந்நாதபுரம் குடிசைப் பகுதி, 'பூங்கா' சட்டமன்ற தொகுதியின் சென்னை பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தின் அருகில் உள்ள குடிசைப் பகுதியாகும். அனல்மின் நிலையத்தின் அத்தியாவசிய அமைப்புகளை கண்காணிக்கும் பொருட்டும், குடிசைப் பகுதிகள் அனல் மின் நிலையத்தின் அருகில் அமைந் துள்ள காரணத்தாலும், அங்குள்ள குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் அளித்து அனைத்து குடிசைகளையும் அப்புறப்படுத்தும் நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 'கேசவ பிள்ளை பூங்கா' என்ற இடத்தில் ஏற்கெனவே 1978ல் முடிவு எடுத்தபடி குடிசை மாற்று வாரியம், குடியிருப்புகளை கட்டியுள்ளது. மேலும் புது ஜெகந்நாதபுரம், 'குடிசைப் பகுதி' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும். இதில் ஒரு பகுதி இரயில்வே இலாகாவிற்கும், மற்றொரு பகுதி சென்னை மாநகராட்சிக்கும் சொந்தமானதாகும். இரயில்வே இலாக்கா, தனக்கு சொந்தமான நிலத்தினை காலி செய்து சென்னை மின்சார வாரியத்திற்கு ஒப்புடைக்குமாறு ஏற்கெனவே வேண்டி யுள்ளது.